# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 136/2012 Date: 19.06.2024

PW1- ஆனந்தாயி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நானும் 1 ம் வாதியும் 1 ம் பிரதிவாதியின் வாரிசுகள். தாவா 1 வது அயிட்ட சொத்து என் அம்மா கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அவர் என் அப்பாவிடம் இருந்து 08.06.1954 ல் கிரையம் வாங்கினார். பொது குடும்ப சொத்தை தான் என் அப்பா என் அம்மா பெயரில் கிரையம் செய்து வைத்தார். 1981 ல் என் அப்பா தனியாக ஒரு சொத்து கிரையம் வாங்கினார். 1954 ல் என் அம்மா கிரையம் வாங்கிய சொத்தின் ஒரு பகுதியை 1956 ல் 6 ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னதம்பிக்கு நாங்கள் விற்பனை செய்து விட்டோம் என்றால் எனக்கு தெரியாது. அதே போல் 29.01.2012 ல் 3 ம் பிரதிவாதிக்கு நாங்கள் ஒரு சொத்தை கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். 15.02.1999 ல் ஆனந்தனுக்கு நாங்கள் ஒரு சொத்தை கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். எங்களிடம் கிரையம் வாங்கியவர்கள் கிரைய சொத்துக்களை தனிதனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விற்பனை சொத்து போக மீதி சொத்தை 30 வருடங்களுக்கு முன்பே நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் வாங்கிய சொத்து பொது குடும்ப சொத்தாக இருந்து அதை நாங்கள் ஏற்கனவே பாகம் பிரித்து விற்பனையும் செய்து விட்டதால் அதில் பாக பிரிவினை கேட்க எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தில் ஒரு வில்லை வீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டை இடித்துவிட்டு என் அப்பா புதிய வீடு கட்டினார் என்றால் சரிதான். அவரவர்கள் பாகம் பிரிந்த சொத்தை தனிதனியாக அனுபவித்து வருவதால் மீண்டும் பாக பிரிவினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் 1 ம் வாதி சொல்லி தான் இத்தாவா தாக்கல் செய்து சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

Sd/-ஆனந்தாயி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நிதிபதி, சங்ககிரி.